# 4. பரிபூரணானந்தம்.

உததிவளை மண்டலியின் மாவளங் கிளர்சண்பை
யுறையுளி லுதித்துநல்ல
உபநிடத வேதாந்த சித்தாந்த சமரசத்
துண்மையிற் றெனவிளக்கா
மிதமிலற் புதவருட் பாமாலை யாலருகர்
மிடல்வீய வடியர்வாழ
மிகையற்ற வபரசுப் பிரமணிய நிலைநின்றும்
வெளிவந்த பிள்ளையாராய்
முதமல்கு பரசுப்பிர மணியமாய் முழுமைக்கு
மூலமா யுள்ள நின்பால்
முறையிட்ட வெனதுவிண் ணப்பங்க ளிக்கால
முடிவுக்கு வாராவிடின்
பதநம்பு மடியனே னுய்யும்வகை யுண்டோ
பரிந்துதயை செய்தல்கடன்மை
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே 1

**பு**ரிவுநனி தூண்டவே பாடெனது பாடலின்
பொருடெரிந் தருண்முதலியாய்ப்
பூரணம் பெறுவா னழுங்குமடி யேனரும்
புரிவிற் கியைந்தகண்ணாய்
அரியதிரு வருளையே நாடுமென தன்பாயெ
னறிவா யுளும்புறத்தும்
ஆமெனது நாட்டமாய் நாட்டமது மோயுநிலை
யாயுள்ள வெந்தையேநின்
பெரியதிரு வருளொடுங் கூடியுனை நீங்காவொர்
பேறுற விலந்துறந்துன்
பிள்ளையா நிற்குமெனை விடுதியே லினியாவர்
பேணியருள் புரிவரன்னோ
பரிவுடன் பெரியதிரு வுளமது கனிந்துசொன
படிகருணை புரியவேண்டும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 2

**வ**ஞ்சவினை கண்டஞ்சி டாநெஞ்ச னாகவிம்
மகிமிசை யிருப்பினரிலார்
மாபாத கங்கள்பல புரியினுங் கருமாமை
மகிடமுது கின்றூவல்போற்
கிஞ்சிலே னுஞ்சஞ்ச லத்தினை விளைக்காத
கிழமையைச் சிவணுமாணார்
கிருபைபெரி தென்றக வினைக்கஞ்சு நான்பவ
கிருத்திய மெதேனும்வனையிற்
கஞ்சநய னத்துளொரு நுண்மண் கிடப்பினுங்
கனவாதை கோடன்மானக்
கைதவங் கோடற் கியாதுதடை யாகலிற்
கறையற்ற நெஞ்சமருளிப்
பஞ்சம கதிக்குநற் பாங்காகு மாறுகண்
பாராய் சதாகாலமும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 3

**பூ**வுழி விசேடகப டங்கூறு மாசாட
பூதிகுண மென்கணில்லை
பொல்லா னெனும்பே ரெடுக்கமன மிலையுன்
பொருட்டுவா தங்கணேரின்
தாவற விரிக்குமோ ரன்புண்டு கண்ணீர்
ததும்பநின் றேங்கலுண்டு
சகசநிலை நாடியொரு நாட்டமுற லுண்டருட்
டகவினைப் புகழ்வதுண்டு
கூவுமறை யிற்பொய் யெழாமற் புரக்குமொரு
கொள்கைக்கும் விழைவதுண்டு
கூறுமிக் குணமெலா முளவேனு முன்னோடு
கூடாம லின்பமுறுமோ
பாவனத் திருவுள மகிழ்ந்திந்த வமையமருள்
பாலிக்க வேண்டுமெந்தாய்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 4

**நீ**யெமது மேனம்பல் வைத்ததற் காகவே
நீணிலந் தனிலுனக்கால்
நித்தமூ னுடையாதி யருள்கிறோ மாகலா
னீயெனக் கருளருளெனாப்
பேயென வலட்டுவ தியாதென்பை யேலுனைப்
பேணாத போக்கும்வெண்மைப்
பிணியாலொர் தெய்வமிலை யென்பவர்க் குஞ்சொன்ன
பிரகார மிகசௌக்கியம்
ஆயுளள வும்பகுக் கின்றனை யலாமலு
மனந்தபே தங்களாய
அஃறிணைப் பூதங்க ளுக்குமருள் கின்றியத
னாலடிமை யறிவிப்புவீண்
பாயுமென் றற்குவழி யில்லையென் கண்ணே
பகுக்குதி விசேடவருளைப்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 5

**இ**ழுதையா கியவெற்கு நீதந்த வித்தையா
லிணையிலுன் னருளொன்றையே
ஏற்கும்வண நான்பாடு பாவெலாம் வெண்மடலி
லெழுதியா னந்தமெய்தாத்
தொழுதொண்டர் முன்னம் படித்துறழ்வு பேசிச்
சுகோதயந் தன்னைநினைவேன்
சுத்தநிலை கிட்டாது பற்றியங னுள்ளுலைவு
தோன்றவே தேம்பிநிற்பேன்
வழுவுள்ள செயல்களைக் கண்ணிமுகம் வாடுவேன்
மதியையும் வைதுகொள்வேன்
மாசிலா வெந்தையே யாளென் றரற்றுவேன்
வாயையு மடக்குவேனுன்
பழுதற்ற திருவரு ளிரங்கிடா தேலென்ன
பண்ணுவே னையவருளே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 6

**எ**ம்பேரி லேபாட வெம்முண்மை கூறவிதி
யென்னுமொர் பிராரத்தமே
இந்நாளி லுள்ளதது தீர்தாறு மருள்செயோ
மென்றமுடி வேதுமுண்டோ
கம்பீர வுறழ்விலே னறிகிலே னன்னணங்
கடவுளா முனைவியக்குங்
கதழ்வாய பிராரத்த மதுகுறுகி லமிழ்திலே
கனிநழுவி வீழ்தல்பொருவுஞ்
செம்பாய யானுநற் றங்கமா வேன்வேறு
திறமாய தீயவிதியால்
தெள்ளரு ளகன்றுநின் றாலென்ன செய்குவேன்
சிந்திக்கி லிதனைவெந்நோய்
பம்பாது போமோ பரானந்த வெள்ளமே
பக்ஷமெப் படியும்வேண்டும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 7

**தொ**ட்டதே பற்றாக நிற்குமன மாய்த்தருட்
டூவெளியை யெவ்விதத்துஞ்
சொந்தப் படுத்தவென வீரமுற் றேயொரு
சுரத்தே தனித்திருந்து
நிட்டைசா தித்தகா னிற்குநிலை காட்டுமா
நிறைகருணை மேனிகொண்டந்
நின்மலப் பொருளையுன் னெஞ்சினிற் றங்கவொரு
நிலைமைசெய் தாய்கொலென்று
சுட்டிவின விப்போய பின்னரடி யேனச்
சுரத்திடை யிருந்துன்கணே
சுகமெளன நாட்டமா நின்றது பொறாமலோர்
சூழ்ச்சிகொண் டெழவிதித்தாய்
பட்டபா டெல்லாம் வியர்த்தமா மோவெங்கள்
பக்ஷமுள பரதெய்வமே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 8

**அ**விவேக மாயைக் கரூபநுவ லின்விடய
மண்ணுமன மென்பதேயாம்
அங்ஙனே யுருவஞ் சொலிற்குரங் கக்கண்
ணமைந்தபைந் தொடியரேயாந்
துவிதமுங் கொண்டமிசி ரங்கூறி னத்தொடியர்
சொல்லிதச் சொல்லுமவர்கள்
சூடுசும வாசமுந் திமிர்களப மோதமுஞ்
சுரதவச னங்கண்மலிய
விவிதமா கப்பாடு சங்கீத சல்லாப
மெல்லுரையு மேயாகுமால்
மேதினியி லிம்மாயை வலிவெலக் கருதினுன்
மேன்மைப்பிர தாபவருளாம்
பவிடிய மிலாதுவன் பேச்சினா லாவதோ
பற்றிப் பிடிக்கவுளதோ
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 9

குத்திமிசை வாழுநன் மைந்தர்களு ளேசிலவர்
கூருறு கருக்குமட்டை
கொண்டுமலை வெட்டமுயல் கின்றதொப் பத்தமது
குற்சிதப் புன்மதிகொடே
முத்திற வகங்கார மாயையை மடித்தரிய
முல்லைபெற் றுய்குவமெனா
மூச்சைப் பிடித்துமல மூத்திர மருந்தியுனை
முன்னா துழன்றுசாவார்
அத்தன்மை யாவுமென் புத்திக் கொவாதேக
வருணெறியை நேடவைத்த
அப்பனே யென்னெண்ண மவலமா தற்கிடனு
மாமோ சொலாய்நலஞ்சால்
பத்திமைக் காரர்க்கு மருளருண கிரிபரா
பரமேயெ னன்பினிறைவே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 10

கடவுள்வணக்கமுட்பட

ஆகத்திருப்பா

நாற்பத்து மூன்றும் முற்றிற்று.